# T/KIN/MUSLIM LADIES COLLEGE
## (National School)

Grade 10

# முதலாம் தவணை மதிப்பீடு–2020

## சுகாதாரமும் உடற்கல்வியும் - I-II

நேரம் 3Hrs

தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் தெளிவாகக் கோடிடுக?

1. தன்னிறைவுப் பொருளாதாரம் வர்த்தகப் பொருளாதாரமாக மாறியமைக்கான காரணம் யாது ?

(1) போர்த்துக் கீசரின் வருகை (2) ஒல்லாந்தரின் வருகை
(3) அந்நியரின் வருகையின் பின் (4) அறேபியரின் வருகையின் பின்

2. பசுமைப் புரட்சி எத்தனையாம் ஆண்டளவில் ஆரம்பிக்கப் பட்டது ?

(1) 1960 ம் ஆண்டு (2) 1958 ம் ஆண்டு
1970 ம் ஆண்டு (4) 1930 ம் ஆண்டு

3. தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையம் எப்போது தாபிக்கப்பட்டது ?

(1) 1920 ம் ஆண்டு (2) 1925 ம் ஆண்டு
1927 ம் ஆண்டு (4) 1930 ம் ஆண்டு

4. 2007 – 2010 வரை விவசாயத் துறையில் அறிமுகம் செய்யப்பட்ட மாற்றம் யாது ?

(1) நெற் செய்கைக்கு உரமானியம் வழங்கள்
(2) “அமா” செயற்றிட்டம் அறிமகம் செய்யபடல்
(3) “பயிரிடுவோம் நாட்டை வளப்படுத்துவோம்” செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது
(4) விவசாயக் காப்புறுதி சபை தாபிக்கப்படல்

5. மழையை அளக்கும் அலகு எது ?

(1) mm (2) ml
(3) kg (4) mg

6. வெப்பநிலையை அளக்கும் மானி எது ?

(1) மழை மானி (2) வெப்ப மானி
(3) ஈர மானி (4) ஞாயிற்றுக் கதிர்ப்பு மானி

7. காற்றினை அளவிடும் மானி யாது ?

(1) மழை மானி (2) வெப்ப மானி
(3) ஈர மானி (4) அனிலா மானி

8. விவசாய சூழலியல் வலயங்கள் எத்தனை வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன ?

(1) 46 (2) 24
(3) 30 (4) 04

9. களியின் விட்டம் யாது?

(1) 2mm (2) 2mm – 0.2mm
(3) 0.2mm – 0.02mm வரை (4) 0.002mm இலும் குறைவான விட்டம்

10. மண்ணங்கிகள் எத்தனை வகைப்படும் ?

(1) ஒன்று (2) இரண்டு
(3) மூன்று (4) நான்கு

11. கடும் அமிலத்தின் PH பெறுமாணம் யாது ?


kalvi.lk

(1) 8. 4 இற்கு மேல் (2) 4.5 – 5.5 இற்கு மேல்
(3) 4.5 இற்கு குறைந்தது (4) 7.3 – 8.3 வரை

12. தாவர இனப்பெறுக்கல் எத்தனை வகைப்படும் ?
(1) 4 வகை (2) 3 வகை
(3) 2 வகை (4) ஒரு வகை

13. வித்தில் காணப்படும் பிரதான பகுதி எது ?
(1) வித்துறை (2) தண்டு
(3) இலை (4) முளையம்

14. ஒரு வித்திலைத் தாவரத்திற்கு உதாரணம் தருக ?
(1) நெல், இறுங்கு, சோளம் (2) நெல், பறுப்பு, கடலை
(3) கத்தரி, தக்காளி, பயறு (4) தக்காளி, இறுங்கு, பயறு

15. வித்து உறங்கு நிலையின் அனுகூலம் 01 தருக ?
(1) நீண்ட காலம் சேமிக்கலாம் (2) குறுகிய காலம் சேமிக்கலாம்
(3) நீண்ட காலம் சேமிக்க முடியாது (4) அதிக காலம் சேமிக்க முடியாது

16. வித்து முளைதிறன் பரிசோதனைக்கு உதாரணம் ஒன்று தருக ?
(1) பெத்திரி கிண்ண முறை (2) டபொக் மேடை முறை
(3) நெரிடோக்கோ முறை (4) விதைப்பு முறை

17. தாவரத்தின் பதியப் பாகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் இனப் பெருக்க முறை எளப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது ?
(1) இயற்கை முறை (2) வித்து முறை
(3) நாற்று முறை (4) பதிய முறை இனப்பெருக்கல் முறை

18. வேர்த் தண்டுக் கிழங்குக்கு K மூலம் இனப் பெருக்கம் செய்யப்படும் 2 பயிருக்கு உதாரணம் தருக ?
(1) பூடு, சின்ன வெங்காயம் (2) மஞ்சள், இஞ்சி
(3) உருளைக் கழங்கு, இன்னல் (4) அன்னாசி, வாழை

19. ஸ்டோபரி, வல்லாறை, சில பன்னங்கள் எதன் மூலம் இனப் பெருக்கம் செய்யப்படுகின்றது ?
(1) குமில் மூலம் (2) உறிஞ்சிகள் மூலம்
(3) ஓடிகள் மூலம் (4) உறிஞ்சிகள் மூலம்

20. தண்டுத் துண்டம் மூலம் இனப் பெருக்கம் செய்யப்படும் முறைகள் எத்தனை ?
(1) ஒன்று (2) மூன்று
(3) இரண்டு (4) நான்கு

21. ஒட்டு முறை மூலம் இனப் பெருக்கம் செய்யப்படும் தாவரம் எவை ?
(1) மா, பலா, தோடை (2) வாழை, மா, பலா
(3) வாழை, தென்னை, தோடை (4) அன்னாசி, தென்னை, மா

22. இழைய வளர்ப்பு மூலம் இனப் பெருக்கம் செய்யப்படும் தாவரங்களுக்கு உதாரணம் தருக ?
(1) மா, பலா, வாழை (2) அந்தூரியம், ஓர்கிட், அன்னாசி
(3) அன்னாசி, தோடை, மா (4) வாழை, தோடை, பலா

23. பயிர்களுக்கான சூழல் எத்தனை வகைப் படும் ?
(1) நான்கு (2) மூன்று
(3) இரண்டு (4) ஒன்று

24. வெப்பம் அதிகமாகக் கிடைக்கப் பெருகின்ற இல்லம் யாது ?
(1) வலையாலான இல்லம் (2) மரச் சலாகையிலான இல்லம்
(3) பசுமை இல்லம் (4) கண்ணாடியிலான இல்லம்


kalvi.lk

25. மரச்சலாகை இல்லத்தினுள் வளர்க்கப்படுகின்ற தாவரங்களுக்கு உதாரணம் தருக ?
(1) அந்தோரியம், ஓர்கிட், அலங்காரத் தாவரங்கள்
(2) ஓர்கிட்டு, மா, தென்னை
(3) தென்னை, பலா, அலங்காரத் தாவரங்கள்
(4) அந்தூரியம், வாழை, மா
26. கண்ணாடியிலான இல்லங்களில் வளர்க்கக் கூடிய தாவரங்களின் விசேட இயழ்பு யாது ?
(1) மழையை அதிகம் விரும்புதல்
(2) வளியை அதிகம் விரும்புதல்
(3) சூழல் வெப்ப நிலையை விட அதிக வெப்ப நிலையை விரும்புதல்
(4) குறைந்த வெப்ப நிலையை விரும்புதல்
27. வெப்ப நிலை, சாரீரப்பதன், ஒளி, வளியின் கட்டமைப்பு உற்பட்ட அனைத்து சூழற் காரணிகளையும் மற்றும் வர்த்தக ரீதியான பயிர்ச் செய்கை, ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கும் பயன்படுகின்ற இல்லம் எது ?
(1) கண்ணாடியிலான இல்லம் (2) மரச் சலாகை இல்லம்
(3) வலையிலான இல்லம் (4) பசுமை இல்லம்
28. மண்ணுக்குப் பதிலாக வேறு ஊடகங்களை பயன்படுத்தி பயிர் செய்கை மேற் கொள்ளல் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும் ?
(1) மண்ணின்றிய பயிர் செய்கை (2) மாடு வளர்ப்பு
(3) ஆடு வளர்ப்பு (4) கோழி வளர்ப்பு
29. மண்ணின்றிய பயிர்ச் செய்கைக்கு உகந்த PH பெறுமான அளவு யாது ?
(1) 1 – 2 இற்கு இடைப்பட்டது (2) 2 – 4 இற்கு இடைப்பட்டது
(3) 5.8 – 6.5 இற்கு இடைப்பட்டது (4) 6 – 8.5 வரையிலாகும்
30. இலங்கையில் மண்ணின்றிய பயிர்ச் செய்கைக்காக அதிகளவில் பயன்படுத்தப்படும் ஊடகம் எது ?
(1) திண்ம ஊடகம் (2) அலன்கூப்பரின் கலவை
(3) சேதனக் கலவை ஊடகம் (4) அல்பேட் கரைசல்
31. திரவ ஊடகத்திலான வளர்ப்பு மறையில் வளர்க்கப்படும் பயிர்கள் சில தருக ?
(1) கோவா, கங்குன், சலாது (2) தக்காளி, குடை மிளகாய், பிபிஞ்ஞா
(3) பிபிஞ்ஞா, தக்காளி, மிளகாய் (4) கத்தரி, வெண்டி, தக்காளி
32. வேர்கள் அமிழ்ந்த நிலையிலான வளர்ப்பு முறையில் வளர்க்கும் பயிர்கள் சில தருக ?
(1) கோவா, கங்குன், சலாது (2) பீற்றூட், முள்ளங்கி, நோக்கோல்
(3) தக்காளி, பெல்பெப்பர், பிபிஞ்ஞா (4) தக்காளி, கங்குன், சலாது
33. மண்ணின்றிய பயிர்ச் செய்கையின் பிரதி கூலங்கள் எவை ?
(1) ஆரம்பச் செலவு அதிகம், அதிக தொழிநுட்ப அறிவு அவசியம்
(2) மிகச்சிறிய இடவசதி போதுமானது களை கட்டல் அவசியமன்று
(3) தொடர்ச்சியாக பயிர் செய்ய முடிதல், மிகச் சிறிய இடவசதி போதுமானது
(4) தொழிலாளர் தேவை குறைவு, தரமான விளைச்சல் கிடைக்கும்
34. இலங்கையின் முதல் பயிர்ச் செய்கை முறை எனக் கருதப்படும் பயிர்ச் செய்கை முறை எது ?
(1) சுழற்சி பயிர் செய்கை (2) சேனைப் பயிர்ச் செய்கை
(3) கலப்பப் பயிர்ச் செய்கை (4) காப்புப் பயிர்ச் செய்கை
35. குறித்த நிலத்தில் மண், நீர், போசனை, உயிர்ப் பல் வகைமை ஆகியன பாதுகாக்கப்படும் வகையில் குறைந்த உள்ளீடுகளைப் பயன்படுத்தி சூழலை காக்கக் கூடியவாறு மேற்கொள்ளப்படும் பயிர் செய்கை எவ்வாறு அழைக்கப்படும் ?


kalvi.lk

(1) சேனைப் பயிர் செய்கை (2) களப்புப் பயிர்ச் செய்கை
(3) காப்புப் பயிர்ச் செய்கை (4) சுழற்சிப் பயிர்ச் செய்கை

36. பல்படைப் பயிரச் செய்கை அனேகமாகக் கையாளப்படும் பிரதேசங்கள் 3 தருக ?
(1) கண்டி, கேகாலை, மாத்தளை (2) திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி
(3) அம்பாறை, மட்டக்கள்பு, கேகாலை (4) திருகோணமலை, பொலநறுவை, மாத்தளை

37. சுழற்சி மறைப் பயிர்ச் செய்கை எத்தனை முறைகளில் மேற்கொள்ளப்படுகிறது ?
(1) நான்கு முறை (2) மூன்று முறை
(3) இரண்டு மறை (4) ஒரு முறை

38. விவசாய வனச் செய்கை தொகுதிக்கு உதாரணம் தருக ?
(1) சேனைப் பயிர்ச் செய்கை (2) சுழற்சிப் பயிர்ச் செய்கை
(3) வீதிப் பயிர்ச் செய்கை, பல்படை பயிர் செய்கை (4) கலப்பு பயிர் செய்கை, தனிப் பயிர் செய்கை

39. குறித்த நிலத்தில் ஒரே பயிரை செய்கை பண்ணுதல் எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?
(1) தனிப் பயிர்ச் செய்கை (2) சுழற்சிப் பயிர்ச் செய்கை
(3) இடைப் பயிர்ச் செய்கை (4) கலப்புப் பயிர்ச் செய்கை

40. தனிப் பயிர்ச் செய்கைக்கு உதாரணம் தருக ?
(1) நெல், தேயிலை, இறப்பர், சோளப் பயிர் செய்கை
(2) பூசனி, தோடை, மா, அன்னாசிப் யிர்ச் செய்கை
(3) சோளம், இறப்பர், வெங்காயம், இறுங்குப் பயிர்ச் செய்கை
(4) தேயிலை, கரும்பு, பலா, தென்னைப் பயிர்ச் செய்கை

Education கல்வி

**பகுதி 11**

**1ம் வினாவுக்கும் வேறு நான்கு வினா உற்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக?**

1. பண்டைய காலம் முதல் இலங்கை விவசாயப் பொருளாதாரத்துடன் பிண்ணிப் பினைந்து விளங்கியமைக்கான பல சான்றுகள் காணப்படுகின்றன.

   1. இலங்கையின் முதல் பயிர்ச் செய்கை முறை என கருதப்படும் பயிர்ச் செய்கை மறை எது?
   2. பல்படைப் பயிர்ச் செய்கைக்கு வழங்கப்படும் மற்றுமொரு பெயர்?
   3. அன்றைய காலத்தில் அலகு நிலப்பரப்பில் பெற்றுக் கொள்ளக் கூடிய பயிர் விளைச்சலின் அளவினை அதிகரித்துக் கொள்வதற்கான வழிமுறைகளில் கவனம் செலுத்திய மக்கள் இதற்கெனப் பயன்படுத்திய வழமறைகள் இரண்டு தருக?
   4. இலங்கையில் விவசாயிகளினால் பின்பற்றப்படுகின்ற பயிர்ச் செய்கை மறைகளில் 02 தருக?
   5. சேனைப் பயிர்ச் செய்கையின் சிறப்பியல்புகள் 02 தருக?
   6. காப்புப் பயிர்ச் செய்கை தொகுதியில் அடங்கும் உப தொகுதிகள் 02 குறிப்பிடுக?
   7. விவசாய வனச் செய்கையின் அனுகூலங்கள் 02 தருக?
   8. பயிர்ச் செய்கை கோலத்தில் அடங்குகின்ற பயிர்ச் செய்கை முறைகளை குறிப்பிடுக?
   9. சுழற்சி முறைப் பயிர்ச் செய்கை என்றால் என்ன?
   10. அஞ்சற் பயிர்ச் செய்கையின் அனகூலங்கள் 02 தருக?

02. 1. விவசாய யுகத்தில் மனிதன் நீர் நிலைகளை அண்மித்ததாக தனது குடியிறுப்புக்களை நிறுவியதற்கான காரணம் யாது?
   2. தற்சமயம் இலங்கையில் தன்னிறைவு மட்டத்தை அடைந்துள்ள இரண்டு பயிர்களைக் குறிப்பிடுக?
   3. பிற பயிர்களில் தன்னிறைவு மட்டத்தை எட்ட உங்களது ஆலோசனைகளைக் குறிப்பிடுக?


kalvi.lk

03. 1. பயிர்ச் செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் காலநிலைக் காரணிகளைக் குறிப்பிடுக?
 2. எளிய மழைமானியின் படம் வரைந்து பெயர் குறிப்பிடுக?
 3. வெப்ப நிலையை அளக்க பயன்படுத்தப் படுகின்ற மானியின் பெயர் யாது?

04. 1. காற்றின் வேகம், திசை ஆகியவற்றை அளவிடப் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் பெயரிடுக?
 2. தென்மேற்க திசையிலிருந்து காற்று வீசுமாயின் காற்று திசைகாட்டியின் அம்பு எந்தத் திசையைக் காட்டும்?
 3. பயிர்ச் செய்கையில் காற்றினால் ஏற்படும் சாதகமான செல்வாக்குகளைக் குறிப்பிடுக?

05. 1. மண்ணின் கூறுகளைப் பெயரிடுக?
 2. மண்ணில் காணப்படுகின்ற 03 வகை நீரையும் குறிப்பிடுக?
 3. மண்ணீர் நிரம்பல் நிலை, வயற் கொள்ளளவு, நிரந்தர வாடற் குணகம் ஆகிய பதங்களை விளக்குக?

06. 1. தரைகீழ், தரை மேல் வித்து முளைத்தல் முறைகளை விளக்கி அவற்றுக்கு உதாரணம் தருக?
 2. வித்து உறங்கு நிலைக்கான காரணங்கள் யாவை?
 3. தாவரப் பதிய வைத்தலின் போது பட்டை வளையத்தை அகற்றுவதன் காரணம் யாது?

07. 1. ஆளுகைச் சூழல் நிபந்தனைகளின் கீழான பயிர்ச் செய்கையில் ஆளுகை செய்யப்படும் சூழல் காரணங்கள் யாவை?
 2. தனிச் சூரிய இனப் பெருக்கியின் படம் வரைந்து பெயர் குறிப்பிடுக?
 3. மண்ணிற்குறிய பயிர்ச் செய்கையில் பயன்படுத்தப்படுகின்ற ஊடகங்களின் பெயர்களை குறிப்பிடுக?

Education கல்வி අධ්‍යාපන


kalvi.lk

Follow and Get papers Daily ..!

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page